நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மன்னார்குடி.

**முன்னிலை:- திருமதி. ஆ. சீதாலெட்சுமி, எம்.ஏ., பி.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.2, மன்னார்குடி

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08- ஆம் நாள் புதன்கிழமை

2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 25-ம் நாள்.

**CNR No.TNTV07- 008901-2024**

in

**ஆண்டு பட்டியல் வழக்கு எண்.08/2025**

வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்: 28.10.2024

வழக்கு விசாரணை முடிவுற்ற நாள்: 13.03.2026

அரசுக்காக

காவல் ஆய்வாளர்,

பெருகவாழ்ந்தான் காவல் நிலையம்,

குற்ற எண்.133/2024,

சட்டப்பிரிவுகள். 296(b), 351(3) BNS and 25(1)(a) Arms Act. …குற்றமுறையீட்டாளர்.

/எதிர்/

விஸ்வநாதன், வயது.46/24,

த/பெ. கருப்பையன்,

கோவில் சித்தமல்லி. … எதிரி

| Sl. No. | Description | Remarks | | |
|---|---|---|---|---|
| 1. | The period of Remand of the Accused | 28.09.2024 | | |
| 2. | The Date of filing of Complaint / Final Report in the Court | 28.10.2024 | | |
| 3. | The Date of Questioning of Accused under sections 240, 246 and 251 Cr.P.C., | 24.02.2025 | | |
| 4. | Miscellaneous petition and thier results including the results on challenge before superior court. Except routine petitioners like petition under sec 317 of the code. | N.A. | | |
| 5. | Date of Examination in chief and cross | PW | Chief | Cross |
| | | 1 | 26.08.2025 | 26.08.2025 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2 | 26.08.2025 | 26.08.2025 |
| | | 3 | 23.09.2025 | 23.09.2025 |
| | | 4 | 23.09.2025 | 23.09.2025 |
| | | 5 | 17.02.2026 | 17.02.2026 |
| | | 6 | 11.03.2026 | 11.03.2026 |
| 6. | Date of Examination of the Accused under section 313 Cr.P.C., | 13.03.2026 | | |
| 7. | Details of Abscondence of an accused and his appearance/ production, as the case may be | N.A. | | |
| 8. | Grant of stay by Superior Courts | N.A. | | |

இவ்வழக்கு என் முன்பாக 13.03.2026-ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V தமிழ்வாணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று ( 08.04.2026) இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**/தீர்ப்புரை/**

இவ்வழக்கானது காவல் ஆய்வாளர், பெருகவாழ்ந்தான் காவல் நிலைய குற்ற எண். 133/2024 ன் கீழ் எதிரி மீது பிரிவுகள்296(b), 351(3) BNS and 25(1) (a) Arms Act- ன் கீழான குற்றம் எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் பேரில் தொடரப்பட்டதாகும்.

**1) குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்**

கடந்த 27.09.2024 ஆம் தேதி 17.00 மணிக்கு பெருகவாழ்ந்தான் காவல் நிலையத்திற்குட்பட்ட சித்தமல்லி கடைத்தெருவில் உள்ள கல்யாண விநாயகர் கோவில் அருகில் இவ்வழக்கின் எதிரி விஸ்வநாதன், வயது. 46/2024 த/பெ. கருப்பையன் கோவில் சித்தமல்லி என்பவர் அந்த வழியாக வந்த வாதியை பார்த்து ஏய் புண்ட மவனே எங்கடா போறா நில்லுடா உன்னை கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று அரிவாளால் வெட்டி ஓடி வந்தபோது வாதி பயந்துகொண்டு ஓடியதற்கு ஏய் தேவடியா மவனே நில்லுடா எங்கடா அந்த தேவடியா மகன் ரமேசு அவனையும் உன்னையும் வெட்டாம விடமாட்டேன்டா என்றும் இந்த அருவாளோட தான் நான் எப்பவும் சுத்திகட்டு இருப்பேன் இருங்கடா ரமேஷ் தேவடியா மகனை குடும்பத்தோடு வேர் அருக்காமல் விடமாட்டேன் என்றும் ரமேஷ் வீட்டில் தானேடா படுப்ப இன்று இரவுக்குள் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று சத்தம்போட்டுக் கொண்டு அரிவாளுடன் துரத்தியும்

கொலை செய்யவேண்டும் என்ற குற்றமுறு நோக்கத்துடன் உயிருக்கு ஊறு விளைவிக்கும் ஆயுதத்துடன் திட்டி மிரட்டி குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி மீது பிரிவுகள் 296(b), 351(3) BNS and 25(1)(a) Arms Act -ன் கீழ் தண்டித்தக்கவர் என்று பெருகவாழ்ந்தான் காவல் ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. குற்றப்பத்திரிக்கையை பரிசீலனை செய்து கோப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு வழக்கு எண் வழங்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 207-ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

4) இவ்வழக்கானது அமர்வு நீதிமன்றத்தால் விசாரணை செய்யக்கூடிய வழக்கு என்பதால் மாண்பமை மாவட்ட அமர்வு நீதிமன்றம் திருவாருக்கு விசாரணைக்காக 20.01.2025 அன்று அனுப்பபட்டது. மாண்பமை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திலிருந்து பிறப்பிக்கப்பட்ட Suomottu Revision No. 3/25 in u/F SC.No----/2025 Dated: 31.01.2025 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் எதிரி மீது 294(பி) மற்றும் 351(3) BNS பிரிவின் படி மட்டுமே கோப்பிற்கு எடுக்க முடியும் என்றும் இந்நீதிமன்றத்தில் விசாரணை செய்யக் கோரி திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. எதிரி மீது 25(1)(a) Arms Act பிரிவின் கீழான குற்றத்தை கோப்பிற்கு எடுக்க இயலாது என்று சொல்லி இவ்வழக்கு கோப்பானது திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

4. பின்னர் இவ்வழக்கின் இறுதி அறிக்கையையும், அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களையும் பரிசீலனை செய்து வாதி தரப்பும், எதிரி தரப்பும் கேட்கப்பட்டு எதிரி குற்றம் செய்திருக்கிறார் என்று அனுமானிப்பதற்கு போதிய ஆதாரம் இருக்கிறது என்பதால் எதிரி மீது பிரிவுகள்296(b), 351(3) BNS -ன் கீழான குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு அக்குற்றச்சாட்டுகளை எதிரிக்கு படித்துக் காட்டி விளக்கப்பட்ட போது எதிரி தன் மீது சாட்டப்பட்ட குற்றத்தை தான் செய்யவில்லை என்று மறுத்து விசாரணை செய்யப்பட வேண்டும் என்று கோரினார். எனவே, தொடர்ந்து வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. எதிரி கோரியவாறு வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. எதிரி மீதான குற்றச்சாட்டினை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலான சாட்சிகள் கொடுக்கப்பட்டிருந்தாலும், புகார் கொடுத்த நபர் பட்டியல் சாட்சி 1,

பார்வை மகசர் பட்டியல் சாட்சிகள் 2 மற்றும் 3, கைப்பற்றுதல் மகசர் பட்டியல் சாட்சி 5 மற்றும் வழக்கை பதிவு செய்த மற்றும் புலன் விசாரணை அதிகாரியான பட்டியல் சாட்சிகள் 7 மற்றும் 8 ஆகியோர் அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். பட்டியல் சாட்சிகள் 4 மற்றும் 6 வரையிலானவர்கள் அரசு தரப்பு வழக்கறிஞரால் நீக்கரவு செய்யப்பட்டுள்ளார்கள்.

6. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சான்று பொருள் ஒன்று சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**7. <u>விசாரிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகள் மீதான அரசு தரப்பு வழக்கின் சாராம்சம் பின்வருமாறு</u> -**

i) கடந்த 27.09.2024 ம் தேதியன்று மாலை 05.00 மணியளவில் சித்தமல்லி கடைத்தெருவில் உள்ள பிள்ளையார் கோவில் அருகில் அ.சா.1 சென்று கொண்டிருந்தபோது எதிரி கையில் அரிவாளை வைத்துக் கொண்டு உன்னையும், ரமேஷ் என்பவரையும் வெட்டிவிடுவேன் என்றும், அ.சா.1 ன் குடும்பத்தையும், ரமேஷ் குடும்பத்தையும் வெட்டிவிடுவேன் என்று மிரட்டியுள்ளார். எதிரி மது அருந்தியிருந்ததால் அ.சா.1 யை வெட்டிவிடுவார் என்று பயந்து ஓடியுள்ளார். எதிரி அ.சா.1 யை பின்தொடர்ந்து துரத்திக் கொண்டு வந்துள்ளார். இது சம்மந்தமாக அ.சா.1 காவல் நிலையம் சென்ற பெருகவாழ்ந்தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். அ.சா.1 ன் மூலம் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

ii) கடந்த 27.09.2024-ம் தேதியன்று பெருகவாழ்ந்தான் காவல் நிலையத்தில் அ.சா.5 நிலைய பொறுப்பிலிருந்த போது, அ.சா.1 நிலையம் அஜராகி கொடுத்த வாய்மொழியான புகாரினை புகார்வாக்குமூலமாக பெற்றுக்கொண்டு, காவல் நிலைய குற்ற எண்.133/2024 BNS பிரிவுகள் 296(பி), 351(3) மற்றும் பிரிவு 25(1)(A) Arms Act ன் கீழ் எதிரியின் மீது அ.சா.ஆ-4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கினை அ.சா.6 புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 20.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் அ.சா.3 வீரக்குமார் மற்றும் அ.சா.2 அன்பழகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு அ.சா.ஆ-2 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ- 5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

iii) சம்பவம் உண்மை என தெரிய வரவே எதிரியை தேடிவந்த நிலையில் எதிரி கர்ணாவூர் பிரிவு சாலை அருகே நின்றுக்கொண்டிருந்தவரை அன்றையதினமே 21.00 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்துள்ளார். மேலும், எதிரியை கைது செய்தபோது, எதிரி அவரது கையில் வைத்திருந்த சுமார் 12 செ.மீ. அளவுடைய மரக்கைபிடி போட்ட 30 செ.மீ. அளவுடைய இரும்பலான அருவாள் அதன் மூக்கு வளைவு சுமார் 4 செ.மீ. அந்த தடயப்பொருட்களை அ.சா.5 உடன் வந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. தமிழ்ச்செல்வன் மற்றும் 2ம் நிலை காவலர் இருதயராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் அ.சா.ஆ-3 கைப்பற்றுதல் மகசரில் எதிரியிடமிருந்து கைப்பற்றி அதில் மேற்படி சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார். பின்னர் எதிரியை நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தியுள்ளார். மேலும், எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட தடயப்பொருளை அ.சா.ஆ-6 படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து நீதிமன்ற வழக்கு சொத்து 106/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. பின்னர் பட்டியல் சாட்சி 4, 5 ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு. சீமான் என்பவரை விசாரித்துள்ளார். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரியின் செய்கையானது BNS பிரிவுகள் 296(பி), 351(3) மற்றும் பிரிவு 25(1)(A) Arms Act ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என கடந்த 11.10.2024-ம் தேதியன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாகக் கூறி அ.சா. 6 சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

8. மேற்கூறிய அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள சாட்சிய பகுதிகளை பிரிவு 351(1)(b) BNSS-ன் கீழ் விளக்கி கூறி கேள்வி கேட்க எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார். எனவே, எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. இருதரப்பு கேட்கப்பட்டது.

**9. <u>அரசு தரப்பு வாதம் பின்வருமாறு</u> :-**

அரசு தரப்பில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் அரசு தரப்பில் முன்னிருத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதிரி மீது உள்ள குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், எதிரி தான் குற்ற செயலில் ஈடுபட்டு அ.சா.1 யை தகாத வார்த்தைகளால் திட்டி, அரிவாளால் வெட்ட முயற்சித்தும், அ.சா.1 பயந்து ஓடிய போது அரிவாளுடன் எதிரி அவரை கொலை செய்யும் நோக்கத்தோடு துரத்திக் கொண்டு குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்துள்ளார் என்பதை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் வகையில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் அமைந்துள்ளதாகக் கூறி எதிரிக்கு தக்க தண்டனை வழங்குமாறும் எடுத்துரைத்தார்.

10. <u>எதிரி தரப்பு வாதம் பின்வருமாறு</u> :-

எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தின் போது இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்னிருத்தப்பட்ட ஆவணங்களும் சாட்சிகளின் சாட்சியங்களும் அரசு தரப்பு வழக்கை உறுதிபடுத்தும் வகையில் இல்லை என்றும், எதிரி மீதுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் பொய்யாக தயாரிக்கப்பட்டவை என்றும் கூறி சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி விடுதலை செய்யவேண்டும் என்று வாதிட்டார் .

11. <u>இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்</u>:-

எதிரி மீது பிரிவுகள் 296(b), 351(3) BNS ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா?

12. <u>தீர்வு</u> :-

சம்பவம் குறித்து புகார் கொடுத்த நபரான அ.சா.1, பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3, வழக்கை பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்ட அ.சா.5, புலன் விசாரணை செய்து இறுதியறிக்கை தாக்கல் செய்த அ.சா.6 ஆகியோர்களின் சாட்சியம் மற்றும் சான்றாவனங்களின் வாயிலாக எதிரி தான் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார் என்பதை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்ய வேண்டியது அரசு தரப்பின் கடமையாகும்.

13) வழக்கு சம்பவம் குறித்து காலதாமதமின்றி புகார் கொடுக்கப்பட்டுள்ளதா? என்பது குறித்து பரிசீலிக்கையில் கடந்த 27.09.2024 ம் தேதி மாலை 05.00 மணியளவில் சித்தமல்லி கடைத்தெருவில் உள்ள கல்யாண விநாயகர் கோவில் அருகில் நடந்ததாக அரசு தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி சம்பவம் குறித்து அச.ா.1 அன்றைய தினமே காவல் நிலையம் ஆஜராகி இரவு 08.00 மணிக்கு காலதாமதமின்றி புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையின் வாயிலாக தெரியவருகிறது.

**14) புகார் கொடுத்த நபரான அ. சா. 1 தனது சாட்சியத்தில்** " கடந்த 27.09.2024 ம் தேதியன்று மாலை 05.00 மணியளவில் சித்தமல்லி கடைத்தெருவில் சென்றுகொண்டிருந்தபோது அங்குள்ள

பிள்ளையார் கோவில் அருகில் சென்று கொண்டிருந்தபோது **எதிரி கையில் அரிவாளை வைத்துக் கொண்டு உன்னையும், ரமேஷ் என்பவரையும் வெட்டிவிடுவேன் என்றும், என் குடும்பத்தையும், ரமேஷ் குடும்பத்தையும் வெட்டிவிடுவேன் என்று மிரட்டினார். எதிரி புண்டாமவனே என்று ரமேஷையும் என்னையும் வெட்டிவிடுவேன் என்று என்னை மிரட்டினார். நான் பயந்து கொண்டு ஓடினேன். எதிரி மது அருந்தியிருந்ததால் என்னை வெட்டிவிடுவார் என்று பயந்து ஓடினேன்**. என்னை பின்தொடர்ந்து தொரத்திக் கொண்டு வந்தார். இதை கடைத்தெருவில் உள்ள அனைவரும் பார்த்தார்கள். " என்று கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

**அவர் தனது குறுக்கு விசாரணையில் "** எதிரி விஸ்வநாதன் தற்போதுள்ள ஆளுங்கட்சியில் உறுப்பினராக இருந்து வருகிறார் என்றால்-சரியல்ல. அரசியல் ரீதியாக எதிரிக்கும், ரமேஷ் என்பவருக்கும் இடையே பிரச்சனை இருந்ததா என்றால்-இருந்திருக்கலாம். நான் சொல்வது சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், நான் சொல்வது போல உண்மையாக சம்பவம் நடந்திருந்தால் கடைத்தெருவில் தொழில் செய்து வருகின்ற நபர்களை சாட்சியாக விசாரித்திருப்பார்கள் என்றால்-அதுபற்றி எனக்கு தெரியாது. **நடந்த சம்பவம் குறித்து சிதம்பரத்தில் உள்ள ரமேஷ் என்பவருக்கு போன் செய்தபோது காவல் ஆய்வாளரிடம் சொல்லிவிட்டதாக கூறி என்னை அனுப்பி வைத்தார் என்றால்-சரிதான். நான் அங்கு சென்றபோது என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றாலும், அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றாலும்-சரிதான். நான் சொல்வது போல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கும் ரமேஷ் என்பவருக்கும் இடையே உள்ள பிரச்சனைக்காக என்னை பயன்படுத்தி இந்த புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால்-சரிதான்.** " என்று கூறியுள்ளார்

**15) பார்வை மகசர் சாட்சியான அ.சா.2 காசிநாதன் தனது சாட்சியத்தில்** " ஒருநாள் மாலை சுமார் 06.00 மணியளவில் நான் சித்தமல்லி கடைத்தெருவில் உள்ள எனது வீட்டின் எதிர்புறம் உள்ள கடையில் இருந்தபோது, போலிசார் வந்து படம் வரைந்து கொண்டார்கள். எதற்காக படம் வரைந்தார்கள் என்றால் முதல் நாள் ஏதோ பிரச்சனை நடந்ததாக போலிசார் என்னிடம் சொன்னார்கள். நானும், பக்கத்தில் மளிகை கடை நடத்தி வரும் வீரக்குமார் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். **"** என்று சாட்சியமளித்துள்ளார்.

**16) பார்வை மகசரில் கையொப்பம் செய்த மற்றொரு சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில்** "என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரிலுள்ள கையொப்பம் என்னுடையதல்ல. வழக்கு சம்மந்தமாக

எனக்கு எதுவும் தெரியாது. **" என்று கூறி சாட்சியம் அளித்து இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் கீழ் பிறழ் சாட்சியாகியுள்ளார்.**

**17) கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.4 தனது சாட்சியத்தில்** " கர்ணாவூர் பிரிவு சாலையில் நின்றுக்கொண்டிருந்த எதிரியை அன்றையதினமே 21.00 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்து, எதிரி தன் கையில் வைத்திருந்த அருவாளை உதவி ஆய்வாளரிடம் ஒப்படைக்க அதை உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாத காரணத்தினால் உதவி ஆய்வாளருடன் சென்ற நானும், இருதயராஜ் என்ற காவலரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். " என்று கூறி சாட்சியமளித்துள்ளார்.

**அவர் தனது குறுக்கு விசாரணையில்**"இந்த வழக்கின் உண்மையான தன்மை குறித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் என் மேல் அதிகாரி எதிரி இருக்கும் இடத்தை குறிப்பிட்டு அவருக்கு உதவியாக வரும்படி சொன்னதால் நானும் சென்றேன். **எதிரியை நாங்கள் தேடிச்சென்றபோது அவர் கையில் அருவாளுடன் நின்றுக்கொண்டிருந்தார் என்றால் சரிதான். எதிரி கையில் அருவாளை வைத்துக்கொண்டு பொதுமக்கள் யாரையாவது அச்சுறுத்தியதாக புகார் வந்ததா என்றால் காவல் நிலைய மேல் அதிகாரிக்கு ரகசிய தகவல் கிடைத்து. சம்பவம் நடந்து மாலை 5 மணிக்கு எதிரி கையில் அருவாளை வைத்துக்கொண்டு ஒரு நபரை விரட்டியதாக சொல்லப்படும் நிலையில் இரவு 9.00 மணிக்கு தான் எதிரியை கைது செய்தோம் என்றால் சரிதான்.** அதுவரை எதிரி 4 மணி நேரமாக கையில் அருவாள் வைத்திருந்தார் என்றால் சரிதான். " என்று கூறியுள்ளார்.

18) கடந்த 27.09.2024 ம் தேதி மாலை 05.00 மணிக்கு எதிரி அ.சா.1 யை தகாத வார்த்தைகளால் திட்டி, அ.சபா.1 யையும் ரமேஷ் என்பவரையும் வெட்டாமல் விடமாட்டேன் என்று அருவாளோடு துரத்தியதாகவும், அ.சா.1 ஓடிவருவதைஅங்குள்ள நபர்கள் பார்த்ததாகவும் கூறி புகார் கொடுத்துள்ளார். புகாரில் சொல்லியுள்ள சங்கதிகளை தொடர்புபடுத்தும் விதமாக முதல் விசாரணையில் எதிரி தான் மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாக கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

19) ஆனால் அவரது குறுக்கு விசாரணையில் எதிரிக்கும் ரமேஷ் என்பவருக்கும் இடையே உள்ள பிரச்சனைக்காக அ.சா.1 யை பயன்படுத்தி இந்த புகார் கொடுக்கப்பட்டதாகவும் புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது குறித்து தெரியாது என்றும் கூறியுள்ளார். சம்பவமானது மக்கள் நடமாட்டம் உள்ள கடைத்தெருவில் நடந்ததாக சொல்லியுள்ள நிலையில் மாதிரி வரைபடத்தில்

காட்டப்பட்டுள்ள சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள கடைகளில் உள்ள நபர்களை விசாரித்து சாட்சிகளாக முன்னிலைப்படுத்தவில்லை.

20) மேலும் அ.சா.1 யை விசாரணை செய்ததற்கு பின்பு எதிரியை தேடி சென்ற போது கர்ணாவூர் பிரிவு சாலையில் அ.சா.4 மற்றும் இருதயராஜ் ஆகியோர் முன்னிலையில் எதிரியை கைது செய்து அவரிடமிருந்து அருவாளை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியதாகவும், அவற்றில் சாட்சி கையொப்பம் செய்ததாக அ.சா.4 சாட்சியம் அளித்துள்ளார். இரவு 09.00 மணிக்கு எதிரி அருவாளுடன் நின்று கொண்டிருந்ததாக சொல்லும் நிலையில் அவற்றை நிரூபிக்கும் வகையில் தனிநபர்கள் யாரையும் சாட்சிகளாக முன்னிலைப்படுத்தவில்லை.

21) சம்பவத்தின் போது எதிரி அ.சா.1 யை அருவாளுடன் மிரட்டியதாக கூறி அ.சா.1 யை தவிர வேறு நபர்கள் யாரும் எதிரி மீது புகார் எதுவும் கொடுக்கவில்லை. சம்பவத்திற்கு பின்னிட்டு கைப்பற்றுதல் மகசர் மூலம் எதிரியிடமிருந்து அருவாள் கைப்பற்றும்வ ரை சுமார் 4 மணி நேரம் எதிரி கையில் அருவாள் வைத்திருந்த நிலையிலும் வேறு யாரும் புகார் கொடுக்கவில்லை என்பது அ.சா.4 ன் சாட்சியத்தின் வாயிலாக தெரியவருகிறது.

22) எதிரி தான் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார் என்று அளித்துள்ள சாட்சியத்தை தொடர்புபடுத்தும் விதமாக தனிநபர் சாட்சிகள் யாரும் முன்னிலைப்படுத்ததாத நிலையில் எதிரி தான் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் என்றும் அவரிமிருந்து தான் அருவாள் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் தீர்மானிக்க இயலாது. அ.சா.1 ன் புகாரில் சொல்லப்பட்டுள்ள சம்பவம் நடைபெற்றது என்பது குறித்தும் எதிரி தான் இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார் என்பதை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யும் விதமாக தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை முன்னிலைப்படுத்த தவறியுள்ளனர்.

மேற்கண்ட காரணங்களினால் எதிரி மீது பிரிவுகள் 296(b), 351(3) BNS ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**<u>இறுதியாக</u>**

1) இவ்வழக்கில் எழும் சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு வழங்கி எதிரி மீது பிரிவுகள் 296(b), 351(3) BNS-ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து மேற்படி எதிரியை இவ்வழக்கில் இருந்து 271(i)BNSS-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

2) எதிரி கொடுத்த பிணை முறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

3)இந்த வழக்கில் கைப்பற்றபட்ட வழக்கு சொத்தான சி.பி.எண். 106/2024 ல் உள்ள சுமார் 12 செ.மீ. அளவுடைய மரக்கைப்பிடியுடன் கூடிய 30 செ.மீ. அளவுடைய இரும்பால் ஆன மூக்கு வளைவாக உள்ள சுமார் 33 செ.மீ. அளவுடைய அரிவாள்-1 யை மேல் முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்க இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

4) வழக்கின் தன்மை, சந்தர்ப்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்திற் கொண்டு பிரிவு 395, 396 BNSS ன்கீழ் உத்தரவுகள் எதுவும் இல்லை.

| Particulars Under Rule 106 of Criminal Rules of Practice-2019 | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Description of the accused | | | | | | | Date of | | | | | | | |
| Sl.No. | Name of the Police Station and Cr. No. | Name | Father Name | Occupation | Residency | Age | Occurance | Complaint | Apprehension | Commitment | Commencement of trial | Close of trial | Sentence of Order | Service Copy of Judgment an accused | Explanation of Delay |
| 1. | Perugavazhanthan 133/2024 | Vishawanathan | Karuppaiyan | Coolie | Kovil Sithamalli | 46/24 | 27.09.2024 | 27.09.2024 | 28.09.2024 | Not Applicable | 26.08.2025 | 13.03.2026 | Accquitted | 17.04.2026 | No Delay |

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- ஆ.சீதாலெட்சுமி,
நீதித்துறை நடுவர்எண்.2,
மன்னார்குடி.

**1. அரசு தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | பூமிநாதன் | புகார்தாரர் |
| அ.சா.2 | அன்பழகன் | பார்வை மகசர் சாட்சி |

| | | |
|---|---|---|
| அ.சா.3 | வீரக்குமார் | பார்வை மகசர் சாட்சி(பிறழ் சாட்சி) |
| அ.சா.4 | தமிழ்செல்வன் | கைப்பற்றதல் மகசர் சாட்சி |
| அ.சா.5 | திரு. சீமான்,<br>காவல் உதவி ஆய்வாளர் | வழக்கை பதிவு செய்த அதிகாரி |
| அ.சா.6 | திருமதி. சந்திரா,<br>காவல் ஆய்வாளர் | புலன் விசாரணை அதிகாரி |

**2. அரசு தரப்பு சான்றவாணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 27.09.2024 | புகார் மனு |
| அ.சா.ஆ. 2 | 27.09.2024 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ. 3 | 27.09.2024 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ. 4 | 27.09.2024 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ. 5 | 27.09.2024 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 27.09.2024 | படிவம் 91 |

3. எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை.

4. அரசு தரப்பு சான்று பொருள்:

| | | |
|---|---|---|
| சா.பொ.1 | அ.சா.6 | சி.பி.எண். 106/2024 ல் உள்ள சுமார் 12 செ.மீ. அளவுடைய மரக்கைப்பிடியுடன் கூடிய 30 செ.மீ. அளவுடைய இரும்பால் ஆன மூக்கு வளைவாக உள்ள சுமார் 33 செ.மீ. அளவுடைய அரிவாள்-1 |

ஒம்/- ஆ.சீதாலெட்சுமி,

நீதித்துறை நடுவர்எண்.2,

மன்னார்குடி.

// உண்மை நகல் //

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.

**குறிப்பு.**

1 இவ்வழக்கின் தீர்ப்பு காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2 இவ்வழக்கின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்.

3 இவ்வழக்கு விசாரணையின் போது சாட்சிகள் மூன்று வாய்தாவிற்கு மேல் அழைக்கப்படவில்லை.

4 கு.வி.மு.ச. 363(5) ஆவது பிரிவின்படி மனனார்குடி அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்களுக்கு தீர்ப்புரையின் நகல் இலவசமாக வழங்கப்பட்டது.

**நகல் :-**

மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.